


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சியில் கோயம்புத்தூர் சாலை மற்றும் பல்லடம் சாலைகளை இணைக்கும் புதிய திட்ட சாலைக்கு "அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் சாலை" என்று பெயர் சூட்டப்பட்ட பெயர் பதாகையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில் பாலாஜி, ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே, சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் திருமதி கனிமொழி, நகராட்சித் தலைவர் திருமதி சியாமளா நவநீதகிருஷ்ணன், துணைத் தலைவர் ச.கௌதமன், டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களின் குடும்பத்தினர் ம.மாணிக்கம், கே.நித்தியானந்தன், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

### மாநகராட்சி – நகராட்சி நேரடியாக செலவு செய்கிறது!

# பட்டினப்பாக்கம் அம்மா உணவகம் சிறப்பாக செயல்படுகிறது!

## சட்டப்பேரவையில் – ஆதாரத்துடன் அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!



சென்னை, பிப். 24-
சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பட்டினப்பாக்கத்தில் அம்மா உணவகம் மூடி இருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்கு பதிலளித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பட்டினப்பாக்கத்தில் அம்மா உணவகம் நன்றாக செயல்படுகிறது என்று ஆதாரத்துடன் விளக்க மளித்தார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-

**அமைச்சர் கே.என்.நேரு:** முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அம்மா உணவகம் எந்த நிலையில் இருக்கிறது, நல்ல நிலையில் இருக்கிறது. உங்களுடைய ஆட்சிக் காலத்தைவிட தற்போது நல்ல நிலையில் இருக்கிறது.

**எடப்பாடி கே.பழனிசாமி:** அமைச்சர் அவர்கள் விரும்பினால் நான் அழைத்துச் செல்கிறேன். வருகின்ற வழிலேயே பட்டினப்பாக்கத்திலேயே அம்மா உணவகம் திறந்தார்கள். அது தற்போது மூடி இருக்கிறது. அம்மா முதன்முதலாக அம்மா உணவகத்தை திறந்தார்கள். அது மூடப்பட்டிருக்கிறது.

**அமைச்சர் கே.என்.நேரு:** எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். நான் வருகிறேன். நீங்கள் அழைத்துச் செல்லுங்கள். நன்றாக இல்லையென்றால் சரி செய்யலாம். ஆனால், நீங்கள் கூறுவதுபோன்று ஓர் இடத்தில்கூட ஆட்களை நிறுத்தவில்லை. நீங்கள் நியமித்த ஆட்கள்தான் இருக்கிறார்கள். நீங்கள்யாரைநியமித்தீர்களோ அதே ஆட்கள் அங்கு இருக்கிறார்கள். அந்த காலத்தில் எவ்வளவு செலவு செய்தீர்களோ, அதைவிட கூடுதலாக செலவு செய்கின்றோம். எங்காவது ஓர் இடத்திலே சாலை விரிவாக்கத்திற்காக மூடியிருந்தால்கூட அடுத்த இடத்தில் திறந்து வைத்திருக்கிறோம். அப்படி, இப்படி என்றால் எப்படி? செய்திருக்கிறோம். வந்து பாருங்கள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் அம்மா உணவகம் இருந்த பெயர் பலகையை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் அகற்றினார் என்பதற்காக அவர்மீது வழக்குப் பதிவு செய்து, அந்தப் பெயர் பலகை உடனடியாக அதே இடத்தில் வைக்க செய்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

**அமைச்சர் கே.என்.நேரு:** அவர் அன்று உள்ளாட்சித் துறை அமைச்சர். இன்றளவும் அம்மா உணவகத்திற்கு நேரடியாக மாநகராட்சி, நகராட்சிகளிலிருந்து செல்வு செய்து கொண்டிருக்கிறோம். நீங்கள் சொன்னது மாதிரி உங்கள் காலத்தில் எந்தளவிற்கு அம்மா உணவகத்தைச் சிறப்பாக நடத்தினீர்களோ அதே அளவு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம். பெயருக்குக்கூட சொன்னார்கள், அவர்கள் ஆரம்பித்தது, பெயரை மாற்றுங்கள் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள், இல்லை, அதே பெயரில் இருக்கட்டும், அப்படியே நடக்கட்டும் என்று சொன்னார். அதோடு மட்டுமல்ல, கொரோனா காலத்திலும், தகராறுஅதாவது மூடக்கூடிய நேரம் ஏதாவது நடைபெறுகின்றபோதும் அனைத்து மக்களுக்கும் அம்மா உணவகத்தில் இலவசமாக உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் நினைக்கின்ற மாதிரி இல்லாமல் உங்கள் காலத்தைவிட சிறப்பாக அந்தத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார். 100 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக கொடுத்திருக்கலாமே தவிர, எல்லா செலவுகளையும் நகராட்சி, பேரூராட்சிகள் தான் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டினப்பாக்கம் அம்மா உணவகங்கள், சிறப்பாக நடைபெறவில்லை என்று சொன்னார்கள். நேரடியாக அதிகாரிகள் - பட்டினப்பாக்கம், சாந்தோம் நெடுஞ்சாலையில் வார்டு எண் 125 மற்றும் 126 ஆகிய இரண்டு வார்டுகளில் அம்மா உணவகங்கள் உள்ளன. இரண்டு அம்மா உணவகங்களும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் நேரடியாகச் சென்று அவருடைய கைப்பேசியிலேயே படம் பிடித்துக் கொண்டு வந்துள்ளார். அதை காண்பிக்கிறோம். அதுதான் செயல்படுகின்றது என்று சொல்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

### பா.ஜ.க. ஆட்சியில் – இந்தியாவின் கடன்

# ரூ.55 லட்சம் கோடியில் இருந்து ரூ.197 லட்சம் கோடிக்கு மேல் உயர்ந்துள்ளது!

## சட்டப் பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றச்சாட்டு!



**சென்னை, பிப்.24 -**
**"பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவின் கடன் ரூ 55 லட்சம் கோடியில் இருந்து 197 லட்சம் கோடிக்கு மேல் உயர்ந்து இருக்கிறது" என்று சட்டப் பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு : -

**அமைச்சர் எ.வ.வேலு :-** பலமுறை இந்த சட்டமன்றத்திலே interim budget என்று கூறுகிறபோது, அதற்கு நாம் என்னென்ன செய்யப்போகிறோம்என்று தெரிவித்த வரலாறே கிடையாது. நான் தொடர்ந்து இந்த சட்டமன்றத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். அப்படி ஒரு வகையல்ல. ஏனென்று சொன்னால், இரண்டு மாதம் சட்டமன்றம் நடப்பதற்கு அரசு அலுவலர்களுக்கு அல்லது அரசினுடைய செலவிற்காகத்தான் எப்போதுமே போடுவார்களேயொழிய 2026 மே மாதம் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி வரும் என்கிற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பட்ஜெட்டில் என்னென்ன வெல்லாம் சொல்வோமேயொழிய, முதலில் அது ஒரு interim budget.

**தங்கம் தென்னரசு :** பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல, இடைக்கால பட்ஜெட்டிலே கொடுக்கக்கூடிய நிதி, அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகளுக்குப் பிறகு ஒவ்வொரு திட்டங்களுக்கு வரக்கூடிய நிதிகள் என்பது மானியக் கோரிக்கையிலே ஒதுக்கப்பட்டுதான் வரும்.

எனவே, இடைக்கால பட்ஜெட் என்பது, நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வளர்ச்சித் திட்டங்களின் ஒட்டுமொத்தமான தொகுப்பாக இது அமையும். அவர்கள் வளர்ச்சித் திட்டங்களே இல்லையென்று சொன்னார்கள். பட்ஜெட்டினுடைய ஒவ்வொரு பக்கத்தினையும் மாண்புமிகு உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள் படித்திருந்தால், இந்த ஐந்தாண்டு காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய மகத்தான சாதனைகளின் தொகுப்பாக, அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய ஒவ்வொரு வளர்ச்சித் திட்டங்களும், அது உட்கட்டமைப்பு வளர்ச்சியாக இருந்தாலும் சரி, சமூக வளர்ச்சியாக இருந்தாலும் சரி, இந்த ஐந்தாண்டுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக அது அமைந்திருக்கிறது என்பதையும், அடுத்த முறையும் அவரே முதலமைச் சராக வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்காக மட்டுமல்ல, வேறு பல திட்டங்களுக்கான ஒரு வழிவகை கோலக்கூடியதாகத்தான் இந்த பட்ஜெட் அமைந் திருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**நயினார் நாகேந்திரன்:-** ஒரு popular government வந்தபிறகுதான் திட்டங்களைப் போடவேண்டும் என்று இல்லை. இந்த பட்ஜெட்டிலேயே நீங்கள் போடலாம். நம்பிக்கையோடு நீங்கள் இருந்திருந்தால், எதிர்காலத் திட்டங்கள் குறித்துச் சொல்லியிருந்தால் அது நிச்சயம்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** ஓர் அரசினுடைய நிதி முறைகள் இருக்கின்றன, நிதி ஒழுங்கு இருக்கிறது. இந்த அரசு அடுத்த காலத்திற்கு வருகிறபோது, என்னென்ன தொகுப்புகள் செய்திருக்கிறோம் என்பதுடன் அடுத்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைக்குமான, அது பள்ளிக் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, நகராட்சி நிர்வாகத் துறை என பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்தத் துறைகளிலே சொல்லப்படக்கூடிய புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை, மீண்டும் முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்து, இங்கேயே சொல்வார்கள். அன்றைய தேதிக்கு நீங்கள் பொறுமையாக இருந்து அவற்றையெல்லாம் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

தமிழ்நாடு அரசாங்கம் கடன் வாங்கியதாக நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள், ஒன்றிய பா.ஜ.க. அரசு, 2014 ஆம் ஆண்டு பதவியேற்றபோது, இந்தியாவினுடைய மொத்தக் கடன் 55 இலட்சம் கோடி ரூபாய், நீங்கள் 2014 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது. தற்போது, அதாவது இந்த நிதியாண்டில், 2026ல் இந்தியாவினுடைய மொத்தக் கடன் எவ்வளவு இருக்கிறது தெரியுமா? 197.8 இலட்சம் கோடி ரூபாயாக உள்ளது என்று வந்திருக்கிறது. எங்கே இருந்தோம்? இது தற்போது 2026ல் இருக்கக்கூடிய நிலைமை. எங்கே இருந்தீர்கள்? 55 இலட்சம் கோடி ரூபாயிலிருந்து 197.8 இலட்சம் கோடியாக உங்களுடைய பா.ஜ.க. ஆட்சியில்தான் இன்றைக்கு வந்திருக்கிறது.

இன்னொன்று, 2027ல் இது எவ்வளவாக இருக்குமென்று நீங்கள் பட்ஜெட்டில் மதிப்பிட்டிருக்கிறீர்கள் என்றால், 214.82 இலட்சம் கோடியாக இருக்குமென்று நீங்கள்தான் உங்களுடைய பட்ஜெட்டில் மதிப்பிட்டிருக்கிறீர்கள். ஆக, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தியாவினுடைய ஒட்டுமொத்தக் கடன் என்பது எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது? எனவே, கடன் ஏன் உயருகிறது என்பது குறித்து, நான் பலமுறை இந்த அவையிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். GDP percentage ஆகவே அதைப் பாருங்கள். ஒவ்வொருவருடைய ஆட்சிக் காலத்திலும் எந்த அளவிற்கு அது வந்திருக்கிறது என்ற புள்ளி விவரங்களுக்குள்ளே நான் அதிகமாகச் சொன்னால், ஏற்கெனவே இந்த அவையிலே பல முறைநான் அதை விளக்கியிருக்கிறேன். எனவே, ஒட்டுமொத்த இந்தியாவினுடைய கடனை நீங்கள் எடுத்துக்கொண்டிருந்தால் ஒவ்வொருவர் தலையிலும் எவ்வளவு கடன் இருக்கிறது என்று நீங்கள் பார்க்க வேண்டுமென்று சொன்னால், எவ்வளவு கூடியிருக்கிறது என்பதை நான் உங்களுடைய பார்வைக்கே வைக்க விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பதிலளிக்கும்போது கூறினார்.



மன்னார்குடி அருகே, திருப்பாலக்குடியில் ஆயத்த ஆடை தொழிற்சாலை கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளுக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டினார், மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, அவைத் தலைவர் தன்ராஜ், ஒன்றியச் செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல்,சித்தேரி சிவா,நா.கவியரசு,கே.வி.கே.ஆனந்த், நகரச் செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்றத்தலைவர் மன்னை.த.சோழராஜன், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.வி.ஆனந்த் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டில் 21,64 இலட்சம் கோடி ரூபாய் ஜி.டி.பி. கூடுதலாக வந்திருக்கிறது!

# இந்தியாவிலேயே வறுமையை ஒழித்த ஆட்சி திராவிடமாடல் ஆட்சி!

## சட்டப்பேரவையில் – பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு பெருமிதம்!



சென்னை, பிப். 24-
சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் கே.பி. முனுசாமி பேசினார்.

குறுக்கிட்டு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசியதற்கு குறுக்கிட்டு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது:-

பொதுவாக பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டினுடைய GDP வைத்து தான் கணக்கிடுகிறார்கள். GDPயைப் பொறுத்துதான் ஆய்வாளர்களும் சொல்கிறார்கள். Accountantsம் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது 2016-2017ல் 13.32 இலட்சம் கோடி அன்றைய GDP இருந்தது. 2020-2021ல் 19.3 இலட்சம் கோடி. அதாவது, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2020-2021ல் தமிழ்நாட்டினுடைய GDP 19.3. 2021-2022லிருந்து ஆரம்பித்து இந்த ஐந்தாண்டு காலம் திராவிட மாடல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு GDPயைக் கணக்கெடுத்துக் கொண்டால், 2026-2027ல் 40.67 இலட்சம் கோடி ரூபாய் GDP அதிகரித்திருக்கிறது. அதாவது, சராசரி 21.64 இலட்சம் கோடி ரூபாய் இன்றைக்கு GDP ஏறியிருக்கிற காரணத்தினால் தான், ஓர் அரசாங்கம் கடன் வாங்குவதாக இருந்தாலும் சரி, நாட்டுக்கு வேண்டிய நன்மைகளை செய்வதாக இருந்தாலும் சரி GDP அதிகரிக்க வேண்டும். ஆக, நான்கு ஆண்டு காலத்தில் உங்களுடைய GDPயையும், எங்களுடைய GDPயையும் ஒப்பிட்டு பார்க்கின்றபோது, 21.64 இலட்சம் கோடி ரூபாய் GDP கூடுதலாக வந்திருக்கிறது என்றால், இது பொருளாதார வளச்சியினுடைய அடிப்படை, ஒன்று.

இன்னொன்று பொருளாதாரம் வளர்ச்சியடைகின்ற நேரத்தில் மக்களைப் பார்க்க வேண்டும். நாட்டில் வறுமை இருக்கிறது. அந்த வறுமையை ஒழித்தால்தான் நாட்டில் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது என்று அர்த்தம். 2005ல் தமிழ்நாட்டின் வறுமை நிலை 36.54 சதவிகிதம். 2023ல் தமிழ்நாட்டின் வறுமை நிலை 1.43 சதவிகிதம். அப்படியென்றால், 36 சதவிகிதம் எங்கிருக்கிறது, இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய வறுமை ஒழிப்பு எப்படி இருக்கிறது. அகில இந்திய அளவில் எடுத்துக்கொண்டால், வறுமை ஒழிப்பு 11.28 சதவிகிதம். ஒரு இந்தியாவின் ஒட்டுமொத்த வறுமை எப்படி இருக்கிறது என்றால் 11.28 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டில் 1.43 சதவிகிதம். ஆக, ஒரு பக்கம் வறுமையை ஒழித்திருக்கிறோம். இன்னொரு பக்கம் GDPயின் அளவு கூடி யிருக்கிறது. அதற்கு பொருளாதார வளர்ச்சி இருக்கிறது என்பதுதான் பொருளே ஒழிய. ஏதோ ஒரே ஒரு துறையில் குறைந்திருக்கி றது என்பதற்காக ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் எடுத்துக் கொள்ள முடியாது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு GDP அளவில் எடுத்துக்கொண்டாலும் சரி, உற்பத்தி அளவில் எடுத்துக் கொண்டாலும் சரி, இன்றைக்கு பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. இதுதான் ஆய்வாளர்களுடைய கணக்கு.

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்து பேசினார்.

# மேட்டூர் - காவிரி உபரி நீர் திட்டத்தை நிறைவேற்றியது தி.மு.க. அரசு!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் இரா.ராஜேந்திரன் பதில்!



**சென்னை, பிப். 24-**
**சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசிய போது "மேட்டூர் காவிரி உபரி நீர்த்திட்டம்" குறித்து சில உண்மைக்கு மாறான தகவல்களைத் தெரிவித்தார் அப்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் இரா. ராஜேந்திரன், "மேட்டூர் காவிரி உபரி நீர்த் திட்டத்தை நிறைவேற்றியது தி.மு.க. அரசு!" என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் குறிப்பிட்டதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மேட்டூர்காவிரி உபரி நீர்த் திட்டத்தை 65 சதவிகிதம் நிறைவேற்றிய தாகக் குறிப்பிட்டிருக்கி றார்கள். ஆனால், 100 ஏரித் திட்டம் என்று அறிவித்தார்கள்.

அதில் இரண்டு ஏரிகளுக்குத்தான் தண்ணீர் விடப்பட்டது. மீதி 55 ஏரிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அந்த திட்டம் நிறை வேற்றப் பட்டி ருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவதிலே முழுமையான உண்மை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா.ராஜேந்திரன் விளக்கம் அளித்தார்.

# தமிழ்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு!

## சட்டப் பேரவையில் – தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விளக்கம்!



சென்னை, பிப்.24 –
சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவா தத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது, தமிழ்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு குறித்து குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்டு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அளித்த விளக்கம் வருமாறு : –

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அந்நிய நேரடி முதலீடு குறித்து பல முறை இதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு நானும் பலமுறை இதே அவையிலுமே பதிலளித்துள்ளேன். எத்தனை முறை கேட்டாலும் தெளிவுரை இதேதான். அதையே மீண்டும் ஒருமுறை கூறுகிறேன். இப்போதாவது அதை கவனமாகக் கேட்டு புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்நிய முதலீடுகள் ஒரு நாட்டிற்குள் வரும்போது, உதாரணமாக Company A, ஒரு முதலீட்டை இந்தியாவிற்குள் கொண்டு வந்து சேர்க்கும் போது, அந்த முதலீடானது company ன் headquartersக்குத்தான் வரும். அந்த headquarters இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் இருக்கும். ஒரு நிறுவனத்தின் தலைமையிடமானது பெரும்பாலும் டெல்லி அருகாமையில் இருக்கும். ஏனெனில், வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள், தங்கள் தலைமையிடத்தை ஒரு நாட்டின் தலைநகரத்தின் அருகில் அமைத்துக்கொள்கிறார்கள். சிலர் டெல்லிக்கு அருகாமையிலுள்ள குர்கான், நொய்டா போன்ற இடங்களில் அமைத்துக்கொள்கிறார்கள். சிலர், financial capital என்பதால் மும்பையில் அமைத்துக் கொள்கிறார்கள்.

எனவேதான், அந்த முதலீடு எங்கே வருகின்றது என்று கணக்கெடுக்கும் போது, அந்த நிறுவனத்தின் தலைமையிடத் திற்குச் சென்று சேர்வதால் FDI skew ஆகிறது. அந்நிய நேரடி முதலீட்டின் எண்ணிக்கையானது அந்த ஊரின் கணக்கில் சேரும்.

நமது முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை, வேறு எந்த அரசாக இருந்தாலும், இந்திய அளவில் எங்கிருந்தாலும் சரி, சாமர்த்தியமான புத்திசாலி த்தன மான விஷயம் என்பது, முதலீட்டின் எண்ணிக்கை எங்கு வருகிறது என்பதைப் பார்க்காமல், அந்த முதலீடு எங்கு வருகிறது என்று பார்ப்பதுதான் முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முதலீடு எந்த இடத்தில் நிறுவனமாக மாறுகிறது, எங்கு அது industry ஆக மாறுகிறது என்பதுதான் முக்கியம். எங்கு அந்தத் தொழில் வளர்ச்சி அடைகிறது, அதன்மூலம் எங்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பது குறித்துதான் கவலைப்பட வேண்டுமே தவிர, FDI குறித்த கவலையாகவே இருக்கக் கூ டாது. FDI is not a proper term to quantify investments into a State. ஆகையால்தான் சொல்கிறேன், தயவு செய்து FDIஐ குறிப்பிட்டு பேசுவதை நிறுத்துங்கள். அது சரியான குறியீடு அல்ல. அந்த நிறுவனம் தமிழ்நாட்டில் தான் அதிகளவில் நேரடி முதலீடுகளைச் செய்திருக்கிறது. ஆகையால் தான், இன்று இந்திய அளவில் manufacturingல் No.1 மாநிலமாக இருப்பது திராவிட மாடல் ஆட்சி நடைபெறும் தமிழ்நாடுதான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

முதலீடுகள் இறுதியாக வந்தடைவது, வேலைவாய்ப்புகளாக மாறுவது தமிழ்நாட்டில்தானே தவிர, வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. ஆகையால் தான், இந்தியா 6.9 சதவிகிதத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் போது, திராவிட நாயகனின் ஆட்சியில் அற்புதமான No.1 மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு, இன்று 11.19 சதவிகித அளவிற்கு உயர்ந்து, இந்தியாவிலேயே கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது என்றால், அதற்குக் காரணம் திராவிட மாடல் ஆட்சிதான்.

எனவே, தயவுகூர்ந்து FDI numbersஐ திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா விளக்கமளித் தார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூரில் சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து கலைஞர், அண்ணா ,பெரியார் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் இசை, மாவட்ட துணைச் செயலாளர் சந்திரன், பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர், காந்தி, நரசிம்மன், இளையராஜா, எக்கூர்.செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், தேங்காய்.சுப்பிரமணி, மகேந்திரன், நாராயணன் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம்,வேல்மணி பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், பேரூர் கழக செயலாளர்கள் வெங்கடப்பன், தம்பிதுரை, பாபு மற்றும் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.